**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**முன்னிலை: திருமதி.S.சுசீலா, பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம்**

**2026-ம் வருடம் பிப்ரவரி மாதம்-17-ம் நாள் செவ்வாய்கிழமை**

**(2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மாசி மாதம் 05-ம் நாள்)**

**இ.ம.எண்.3/2024 in அசல் வழக்கு எண்.168/2024**

1. ரங்கசாமி

2. காலம்மா ------ மனுதாரர்கள் / வாதிகள்

**//எதிர்//**

1. ரங்கசாமி

2. சிவு

3. M.நஞ்சுண்டசாமி

4. M.மகாதேவசாமி

5. வெங்கடாச்சலா

6. S.சித்தமல்லப்பா --- எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 28.01.2026-ம் தேதியன்று என் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்து மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ஈஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், 1, 2-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.பிரசாத் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.M.சண்முகம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.,

**உத்தரவு**

இம்மனு உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 39 விதி 1, 2 மற்றும் பிரிவு 151 ன் படி, மனு சொத்தில் மனுதாரரின் அனுபவத்தினை எதிர்மனுதாரர்களோ, அவரது ஆட்களோ, உள்ளீட்டாளர்களோ அத்துமீறி நுழைந்து, எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவு பிறப்பிக்க வேண்டி மனு

தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்.**

**1.1** தாவா சொத்து மனுதாரரின் தாத்தா புட்டு நாயக்கருக்கு பாத்தியப்பட்டது. புட்டு நாயக்கர் அவரது ஒரே மகள் சென்னம்மாளை வாரிசாக விட்டுவிட்டு காலம்சென்றுவிட்டார். சென்னம்மாளின் வாரிசுகள் மனுதாரர்கள் ஆவார்கள். சென்னம்மாளிடம் 1-ம் எதிர்மனுதாரரின் தாத்தா புட்டுரங்கநாயக்கர் மற்றும் அவரது தந்தை மாதநாயக்கர் ஆகியோர்கள் தாவா சொத்துடன் சேர்ந்து ஆர்.எஸ்.நெ.38/3 திகினாரை கிராமத்தில் உள்ள பூமியை குறைந்த விலைக்கு கிரையம் கேட்டதால், சென்னம்மாள் மறுத்துவிட்டார். இந்நிலையில், புட்டுரங்கநாயக்கர், மாதநாயக்கர் அவருடன் சேர்ந்து ரங்கநாயக்கர் மற்றொரு மாதநாயக்கர் ஆகியோர்கள் மனு சொத்தில் இடையூறு செய்ய முற்பட்டார்கள். எனவே, சென்னம்மாள் வாதியாக இருந்து இந்நீதிமன்றத்தில் தாவா சொத்து சென்னம்மாளுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கேட்டு அ.வ.எண்.348/1987 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

**1.2** அதேபோல், புட்டுரங்கநாய்க்கர், சென்னம்மாளுக்கு எதிராக அ.வ.எண்.367/1987 என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். இருவழக்குகளும் ஒருசேர விசாரணை செய்யப்பட்டு, இந்நீதிமன்றம் கடந்த 26.04.1993-ல் சென்னம்மாள் தாக்கல் செய்த அ.வ.எண்.348/1987 வழக்கில் விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. 1-ம் எதிர்மனுதாரரின் தாத்தா புட்டுரங்கநாயக்கர் தாக்கல் செய்த அ.வ.எண்.367/1987 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதை எதிர்த்து புட்டுரங்கநாயக்கர் கோபிசெட்டிபாளையம் மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மே.மு.வ.எண்.54/1993 மற்றும் மே.மு.வ.எண்.55/1993 ஆகிய வழக்குகள் கடந்த 03.11.1995-ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**1.3** மீண்டும் அதை எதிர்த்து புட்டுரங்கநாயக்கர் மாண்பமை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இ.மே.மு.வ.எண்.1083/1995, 1084/1995 ஆகிய வழக்குகள் ஆஜரின்மையால் கடந்த 26.06.2012-ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்நீதிமன்றம் பிறப்பித்த அ.வ.எண்.348/1987 மற்றும் 367/1987 ஆகிய வழக்குகளின் தீர்ப்பாணை ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், சென்னம்மாள் காலம்சென்ற பிறகு, மனுதாரர்கள் மனு சொத்தில் அனுபவித்து வருகிறார்கள். மேற்படி, அ.வ.எண்.348/1987 வழக்கின் தீர்ப்புரையில் தாவா சொத்தைப் பொறுத்து, புட்டுரங்கநாயக்கர் பெயரில் வழங்கப்பட்ட பட்டா, வருவாய்துறை அதிகாரிகளால் எவ்வித விசாரணையும் இல்லாமல் மனு தாக்கல் செய்த தேதியன்று பட்டா வழங்கப்பட்டுள்ளதாக விவாதிக்கப்பட்டு, மேற்படி புட்டுரங்கநாயக்கர்

பெயரில் உள்ள பட்டா செல்லாது என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி சங்கதிகளை மறைத்து, தாவா சொத்தைப் பொறுத்து புட்டுரங்கநாயக்கர் பெயரில் உள்ள பட்டாவை மோசடியாக பயன்படுத்தி 1-ம் மனுதாரர் அவரது மகனான 2-ம் எதிர்மனுதாரருக்கு கடந்த 07.06.2023-ல் தாளவாடி சார்பதிவகத்தில் தானசெட்டில்மெண்ட் ஆவண எண்.1094/2023-ன் படி செட்டில்மெண்ட் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி 2-ம் எதிர்மனுதாரர், 3 முதல் 6 எதிர்மனுதாரர்களுடன் தாவா சொத்தை விற்க கடந்த 06.06.2024-ல் கிரைய ஒப்பந்த ஆவண எண்.819/2024 ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

**1.4** அதன்பின்னிட்டு கடந்த 10.10.2024-ல் 2-ம் எதிர்மனுதாரர் 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் பெயரில் தாவா சொத்தைப் பொறுத்து கிரைய ஆவணம் 1645/2024 ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். மேற்படி விவரம் மனுதாரர்களுக்கு கடந்த ஜூலை மாதம் 2024 -ல் தெரியும். மனு சொத்தில் இருக்கும் மனுதாரர்களை வெளியேறுமாறு 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் பிரச்சனை செய்தார்கள். அதன்பின்னிட்டு தாவா சொத்திற்கு வில்லங்கம் எடுத்துப் பார்த்தபோது தெரிய வந்தது. தாவா சொத்தைப் பொறுத்து வில்லங்கம் ஏற்படுத்தக் கூடாது என தடங்கல் மனுவை கடந்த 31.07.2024-ல் மனுதாரர் விண்ணப்பித்தார்கள். ஆனால் 9-ம் எதிர்மனுதாரர் தடங்கல் மனுவை கருத்திற்கொள்ளாமல் 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் பெயரில் கிரைய ஆவணம் ஏற்படுத்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், தாவா சொத்து மனுதாரர்கள் அனுபத்தில் தொடர்ச்சியாக இருந்து வருகிறது. ஆனால் 1-ம் எதிர்மனுதாரர், 2-ம் எதிர்மனுதாரருக்கு ஏற்படுத்திக் கொடுத்த போலியான தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் 2-ம் எதிர்மனுதாரர், 3 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்ததை அடிப்படையாக கொண்டு 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் மனு சொத்திலிருந்து மனுதாரர்களை வெளியேற்ற முயற்சித்தார்கள். எனவே, மனு சொத்தில் மனுதாரர்களின் அனுபவத்தினை அசல் வழக்கு முடியும் வரை இடையூறு செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1, 2-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-**

மனு மோசடியானது, சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. 1, 2 மனு சொத்தினை 1-ம் எதிர்மனுதாரரின் தந்தைவழி தாத்தாவான புட்டுரங்கநாயக்கர் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வந்து, வருவாய்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து, அவரது அனுபவத்தில் இருந்து வந்தது. அதன்பின்னிட்டு 1-ம் எதிர்மனுதாரரின் தகப்பனாரான மாதநாயக்கரின் அனுபவத்தில் இருந்து வந்த தாவா சொத்தினை சென்னம்மாள் என்பவர் கடந்த 02.07.1999-ல், 1-ம் எதிர்மனுதாரரின் தாத்தா

புட்டுரங்கநாயக்கருக்கு ரூ.41,600/-ம் பெற்றுக்கொண்டு கிரைய ஆவணம் மூலம் அவருக்கு உள்ள உரிமையை விற்பனை செய்து விட்டார். அதன்பின்னிட்டு 1-ம் எதிர்மனுதாரரின் தாத்தா புட்டுரங்கநாயக்கரும், அவரது மறைவிற்கு பிறகு மாதநாயக்கர் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து, மாதநாயக்கர் காலம்சென்ற பிறகு 1-ம் எதிர்மனுதாரர் பெயரில் பட்டா மாறுதல் ஏற்பட்டு சுவாதீனத்தில் இருந்த, மனு சொத்தை 2-ம் எதிர்மனுதாரருக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. பின்னிட்டு 2-ம் எதிர்மனுதாரர், 3 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். 1-ம் எதிர்மனுதாரரின் தாத்தா புட்டுரங்கநாயக்கருக்கு, சென்னம்மாள் கிரையம் ஏற்படுத்திக் கொடுத்த விவரத்தை மறைத்து வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 3 முதல் 6-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-**

மனு சொத்து 1-ம் எதிர்மனுதாரரின் தந்தை மாதநாயக்கருக்கு வருவாய் துறை ஆணங்களின் அடிப்படையில் பாத்தியப்பட்டு, 40 ஆண்டுகளாக அனுபவத்தில் இருந்து வருகிறது. அவரது மறைவிற்கு பிறகு 1-ம் எதிர்மனுதாரர் அனுபவித்து வந்தார். பின்னட்டு, 1-ம் எதிர்மனுதாரர் அவரது மகனான 2-ம் எதிர்மனுதாரருக்கு கடந்த 07.06.2023-ல் செட்டில்மெண்ட ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். அதன்படி 2-ம் எதிர்மனுதாரர் முழு உரிமையாளராகி கடந்த 10.10.2024-ல் 3 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். பின்னிட்டு 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தொடர்ந்து சுவாதீனத்தில் இருந்து வந்தனர். மனு சொத்தைப் பொறுத்து வருவாய்துறை ஆவணங்களில் 1, 2 எதிர்மனுதாரர்கள் பெயர் உள்ளதை உறுதி செய்த பிறகும், வில்லங்கச் சான்றிதழ், வருவாய்துறை ஆவணங்களை பார்வையிட்டு, 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் கிரையம் பெற்றார்கள். மேற்படி அசல் வழக்கு எண்.348/1987 தீர்ப்பாணை பற்றி இம்மனுதாரர்களுக்கு தெரியாது. மேற்படி தீர்ப்பாணையை சென்னம்மாள் என்பவர் பதிவு செய்யவில்லை. மேலும், 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் நல்லெண்ணத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றுள்ளார்கள். எனவே, பல சங்கதிகளை மறைத்து மனுதாரர்களால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. மனுதாரர்கள் தரப்பில் **ம.த.சா.ஆ.1** முதல் **ம.த.சா.ஆ.18** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சி, சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**6. தீர்வு**

**6.1** ஆவணங்கள் மற்றும் மனு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. இரு தரப்பு வாதங்களை பொறுத்து வழக்காவணங்களை பரிசீலித்துப் பார்க்கும்போது, மனுதாரர்கள் தரப்பில், தாவா சொத்து தொடர்பாக மனுதாரர்களின் தாயார் சென்னம்மாளுக்கு பாத்தியப்பட்டது என இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.348/1987 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பாகியுள்ளதாகவும், அதை எதிர்த்து 1-ம் எதிர்மனுதாரரின் தாத்தா புட்டுரங்கநாய்க்கர் தாக்கல் செய்த முதல் மேல்முறையீட்டு வழக்கும், இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி இந்நீதிமன்ற அ.வ.எண்.348/1987 வழக்கினை ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதாகவும், அதை நிரூபிக்கும் வகையில் அ.வ.எண்.348/1987 வழக்கின் தீர்ப்புரை, தீர்ப்பாணை, வழக்குபதிவேடு, 2-ம் மேல்முறையீட்டு உத்தரவு ஆகியவை **ம.த.சா.ஆ.2** முதல் **ம.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனு சொத்தான ரீ.ச.எண்.44/3-பூமிக்கு புட்டநாய்க்கர் பெயரில் உள்ள ஆர்.எஸ்.ஆர் பதிவேடு **ம.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சென்னம்மாளின் இறப்புச் சான்றிதழ் **ம.த.சா.ஆ.6** ஆகவும், வாரிசு சான்திறழ் **ம.த.சா.ஆ.7** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சென்னம்மாள் கடந்த 15.12.2023-ல் மனுதாரர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு காலம்சென்றுவிட்டார் என அறிய முடிகிறது. அவரது கணவர் ரங்கநாயக்கர், சென்னம்மாளுக்கு முன்னரே காலமாகிவிட்டார். தாவா சொத்தை 1-ம் எதிர்மனுதாரர், 2-ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவண எண்.1094/2023 சான்று நகல் **ம.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2-ம் எதிர்மனுதாரர், 3 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஒப்பந்தம், கிரைய ஆவணம் **ம.த.சா.ஆ.9**, **ம.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு மனு சொத்தான திகினாரை கிராமம் புல எண்.44/3 பூமியின் முழு உரிமையாளராக 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, பட்டா **ம.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **ம.த.சா.ஆ.12** -ஐ காணும்போது, 1-ம் எதிர்மனுதாரர் கடந்த 31.07.2024-ல் தாவா சொத்தைப் பொறுத்து தடங்கல் மனு தாக்கல் செய்த ரசீது குறியீடு செய்யப்பட்டுள்ளது. **ம.த.சா.ஆ.13** ஆக தாவா சொத்திற்கான வில்லங்கச் சான்றிதழும், **ம.த.சா.ஆ.14** ஆக வாதி, பிரதிவாதிகளுக்கு இடையே ஏற்பட்ட பிரச்சனையில் தாளவடி காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மனு ரசீது குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**ம.த.சா.ஆ.15** மற்றும் **ம.த.சா.ஆ.16** ஆக மனுதாரர் தாக்கல் செய்த Caveat மனுவின் நகலும், **ம.த.சா.ஆ.17** மற்றும் **ம.த.சா.ஆ.18** ஆக மனுதாரர்களின் ஆதார் அட்டை நகல்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6.2** மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களை காணும்போது, மனு சொத்து தொடர்பாக ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.348/1987 என மனுதாரர்களின் தாயாரால், எதிர்மனுதாரர்களின் தந்தை, தாத்தாவிற்கு எதிராக விளம்புகை பரிகாரம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர்களின் தாயார் சென்னம்மாளுக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்படி தீர்ப்பாணையை எதிர்த்து 1-ம் எதிர்மனுதாரரின் தந்தை மற்றும் தாத்தாவால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டு, இந்நீதின்ற அ.வ.எண்.348/1987 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்பதும் அறிய முடிகிறது. இந்நிலையில், தாவா சொத்திற்கு மனுதாரர்களின் தாயார் உரிமையாளர் என விளம்புகை பரிகாரம் வழங்கியுள்ள நிலையிலும், தாவா சொத்தின் பட்டா 1-ம் எதிர்மனுதாரரின் தாத்தாவிற்கு விசாரணை எதுவும் மேற்கொள்ளாமல், இயற்கை நீதியை பின்பற்றாமல் பட்டா வழங்கப்பட்டுள்ளதாக, மேற்படி தீர்ப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி பட்டாவை ஆதரவாக கொண்டு, 1-ம் எதிர்மனுதாரர் அவரது மகனான 2-ம் எதிர்மனுதாரர் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி, 2-ம் எதிர்மனுதாரர் 3 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என முதல்நிலையாக அறிய முடிகிறது.

**6.3** மேலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்களின் தாயார் சென்னம்மாள் 1-ம் எதிர்மனுதாரரின் தாத்தா புட்டுரங்கநாயக்கருக்கு கடந்த 02.07.1999-ல் கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி கிரைய ஆவணத்தை எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

**6.4** மேலும், 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வில்லங்கம், வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையிலேயே தாவா சொத்தை 2-ம் எதிர்மனுதாராரிடம் இருந்து கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், தாவா சொத்து தொடர்பாக விளம்புகை பரிகாரம் வழங்கி, மனுதாரர்களின் தாயார் உரிமையாளர் என விளம்புகை பரிகாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில், தாவா சொத்தைப் பொறுத்து 1-ம் எதிர்மனுதாரர், 2-ம் எதிர்மனுதாரருக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி, அதன் அடிப்படையில் 2-ம் எதிர்மனுதாரர் 3 முதல் 6-ம் எதிர்மனுதாரர்கள் பெயரில் கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இந்நிலையில், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்களின் தாயார் சென்னம்மாள் என்பவர் கடந்த 02.07.1999-ல், 1-ம் எதிர்மனுதாரரின் தாத்தா

புட்டுரங்கநாயக்கருக்கு ரூ.41,600/-ம் பெற்றுக்கொண்டு கிரைய ஆவணம் மூலம் விற்பனை செய்து விட்டார் என எதிர்கட்சி தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தாவா சொத்திற்கு மேற்படி 3 முதல் 6 எதிர்மனுதாரர்களின் பெயரில் உள்ள கிரைய ஆவணம் செல்லத்தக்கதா ? இல்லையா ? என்பதை தற்போதைய நிலையில் தீர்மாணிக்க இயலாது. அசல் வழக்கின் முழு விசாரணைக்கு பிறகே தீர்மாணிக்க இயலும். மேலும், தாவா சொத்து மனுதாரரின் அனுபவத்தில் இருப்பதாக மனுதாரரும், எதிர்மனுதாரரின் அனுபவத்தில் இருப்பதாக எதிர்மனுதாரரும், வாதம் செய்துள்ளனர்.

**6.5** ஆனால், மனுதாரர் தரப்பில், 1987 தீர்ப்பாணைக்கு பிறகு தாவா சொத்தில் மனுதாரர்கள் அனுபவத்தில் இருப்பதாகவும், கடந்த ஜூலை 2024-ல் மனுதாரர்களை வெளியேற்ற முயற்சி செய்ததால், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும், எதிர்மனுதாரர்களின் ஆவணங்களை பதிவு செய்யக்கூடாது என தாளவாடி சார்பதிவாளருக்கு கடந்த 31.07.2024-ல் தடங்கல் மனு கொடுக்கப்பட்டுள்ளதாகவும், ஆனாலும் அதைப் பொருட்படுத்தாமல் 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள் பெயரில் கிரைய ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி கிரைய ஆவணம் பெயரளவிலானது. அதன் அடிப்படையில் மனு சொத்தின் சுவாதீனத்தை எதிர்மனுதாரர்கள் எடுக்கவில்லை என மனுதாரர் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் நீதிமன்ற ஆவணங்களின் படி மனு சொத்து மனுதாரர்களின் தாயாருக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் வழங்கப்பட்டு ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதாலும், மனு சொத்து மனுதாரர்களின் அனுபவத்தில் இருப்பதாகவும், அதில் எதிர்மனுதாரர்கள் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்வதாக மனுதாரர்களால் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளதை கருத்திற்கொண்டும் பார்க்கும்போது, மனுதாரர்களுக்கு ஆதரவாக முதல்நிலை வாய்ப்பும், சமநிலை நோக்கும் உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. தாவா சொத்தில் மனுதாரர்களின் அனுபவத்தை பிரதிவாதிகளோ, ஆட்களோ இடையூறு செய்தால் மனுதாரர்களுக்கு ஈடுசெய்ய இயலாத இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்பதை கருத்திற்கொண்டு, மனு சொத்தில் மனுதாரர்களின் அனுபவத்தை எதிர்மனுதாரர்களோ, அவரது ஆட்களோ அசல் வழக்குமுடியும் வரை இடையூறு செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**7. இறுதியாக,**

**இம்மனு செலவு தொகையின்றி, அசல் வழக்கிற்கு பாதகமின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.02.17 14:18:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | | |
|---|---|---|---|
| Ex.P1 | 06.11.2024 | மனு சொத்திற்கான ஆர்.எஸ்.ஆர் பதிவேடு | - உண்மை நகல் |
| Ex.P2 | 26.04.1993 | அ.வ.எண்.348/1987 மற்றும் அ.வ.எண்.367/1987-வழக்கின் தீர்ப்புரை | - சான்று நகல் |
| Ex.P3 | 26.04.1993 | அ.வ.எண்.348/1987 வழக்கின் தீர்ப்பாணை | - சான்று நகல் |
| Ex.P4 | -------------------- | வழக்குப் பதிவேடு | - சான்று நகல் |
| Ex.P5 | 26.06.2012 | இ.மே.மு.வ.எண்.1084/1999-ன் தீர்ப்புரை | - சான்று நகல் |
| Ex.P6 | 01.08.2024 | சன்னம்மாவின் இறப்புச் சான்றிதழ் | - சான்று நகல் |
| Ex.P7 | 12.08.2024 | வாரிசுச் சான்றிதழ் | - கணினி நகல் |
| Ex.P8 | 07.06.2023 | தானசெட்டில்மெண்ட் பத்திரம் | - கணினி நகல் |
| Ex.P9 | 06.06.2024 | கிரைய உடன்படிக்கைப் பத்திரம் | - கணினி நகல் |
| Ex.P10 | 10.10.2024 | விற்பணை ஆவணம் | - கணினி நகல் |
| Ex.P11 | 11.11.2024 | பட்டா எண்.1904, புல எண்.44/3-ன் நில உரிமை விவரங்கள் | - கணினி நகல் |
| Ex.P12 | 31.07.2024 | தடங்கல் மனு பதிவு செய்ததன் இரசீது | - கணினி நகல் |
| Ex.P13 | 19.10.2024 | 01.01.2010 – 18.10.2024 காலகட்டத்திற்கான வில்லங்கச் சான்றிதழ் | - கணினி நகல் |
| Ex.P14 | 29.10.2024 | காவல்நிலையத்தில் புகார் வழங்கப்பட்டதற்கான இரசீது | - அசல் |
| Ex.P15 | -------------------- | Caveat petition | - நகல் |
| Ex.P16 | -------------------- | Caveat petition | - நகல் |

| | | | |
|---|---|---|---|
| Ex.P17 | --------------------- | 1-ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை | - நகல் |
| Ex.P18 | --------------------- | 2-ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை | - நகல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சி சான்றாவணங்கள்**:- **-இல்லை-**

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.02.17 14:18:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

**FAIR ORDER**

**I.A.3 / 2024**

**O.S.168 / 2024**

**17 / 02 / 2026**